நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**கேழ்வரகு சாகுபடி செய்யுங்கள்!**

எஸ்.சபேஷ்

First Published : 24 Feb 2011 01:15:37 PM IST

அரக்கோணம்: கோடைமழை சற்று முன்பே தொடங்கிவிட்டதால் கேழ்வரகு பயிரிட்டு அதிக லாபம் ஈட்டலாம் என வேளாண் துறையினர் யோசனை தெரிவித்துள்ளனர்.

கேழ்வரகை எந்த பருவத்திலும் பயிரிடலாம். எல்லா வகை நிலங்களிலும் பயிரிடலாம். மண்ணின் கார, அமிலத் தன்மை 6.5 முதல் 7.5 கொண்ட நிலங்கள் சிறந்தவை.

உழவு: நிலத்தை சட்டிக் கலப்பை கொண்டு ஆழமாக உழவு செய்யவேண்டும். இப்படி உழுவதால் மண் அரிப்பு தடுக்கப்பட்டு மழைநீர் சேமிக்கப்படுவதுடன், களைகளையும் ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

நடவு: வறட்சியை தாங்கி வளர விதைகளை விதை நேர்த்தி செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் விண்ணிலுள்ள தழைச்சத்தைக் கிரகித்து பயிர்களுக்கு அளிக்கலாம்.

நாற்றுவிட்டு நடவு செய்தல் நல்லது. நேரடியாக விதைப்பதால் 3 வாரங்களில் குருத்து ஈ தாக்குதல் இருக்கும். இதை எளிதில் கட்டுப்படுத்த முடியாது. நாற்று விட்டு நடவு செய்யும்போது இதன் தாக்குதல் குறையும். மேலும் 10 நாள்களுக்கு முன்பே அறுவடைக்கு வந்துவிடும்.

வெளிறிய தோற்றம் கொண்ட மற்றும் அடிச்சாம்பல்நோய் தாக்கிய நாற்றுக்களை அகற்றிவிட வேண்டும்.

ஒரு குத்தில் வாளிப்பான ஒரு நாற்றை மட்டும் நட வேண்டும். 10 சதுர மீட்டருக்கு 150 செடிகள் என்ற எண்ணிக்கையில் பராமரிக்க வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு தேவையான நாற்றுகளை உற்பத்தி
செய்ய 7.5 சென்ட் தண்ணீர் தேங்காத நிலத்தை தயார் செய்ய வேண்டும்.

நட்ட 15 மற்றும் 30 நாளில் தழைச்சத்து உரத்தை மேலுரமாக இடவேண்டும். விதைத்தவுடன் ஒரு முறையும், 4-ம் நாளும், 10-ம் நாளும் நிலம் மற்றும் காலநிலைக்கு தகுந்தவாறு நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

அறுவடை: தானியம் காய்ந்து கடினத் தோற்றம் பெற்றவுடன் கதிர்களை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். தானியங்களை விசை கதிரடிகளை கொண்டோ, கல் உருளைகளை பயன்படுத்தியோ, மாடுகளை பிணைக் கட்டியோ பிரித்தெடுக்கலாம்.

இது குறித்து நெமிலி வேளாண் உதவி இயக்குநர் ஒய்.முகமது முபாரக் கூறும்போது, ஒரு மாதத்துக்கு முன்பே கோடை மழை தொடங்கி விட்டதால் கேழ்வரகு பயிரிட இது ஏற்ற தருணம். அனைவரும் நெல் பயிரிடும் போது நாம் கேழ்வரகை பயிரிட்டால் நல்ல விலை கிடைக்கும் என்றார்.

**"கறிவேப்பிலை சாகுபடி; கஷ்டமில்லா வருமானம்'**

நமது நிருபர்

First Published : 24 Feb 2011 01:14:57 PM IST

திருவள்ளூர்: அதிக மருத்துவக் குணங்களும், அதிக லாபமும் தரும் கறிவேப்பிலை சாகுபடியில் ஒரே ஆண்டில் ஆறு முறை அறுவடை செய்து விவசாயிகள் அதிக லாபம் ஈட்ட முடியும்.

தென்னிந்திய சமையலில் அதிகளவில் இடம் பெறுவது கறிவேப்பிலை. கடந்த சில மாதங்களுக்கு முன் ஒரு கொத்து 50 காசுக்கு விற்கப்பட்டு வந்த கறிவேப்பிலை தற்போது 2 ரூபாய் வரை விற்கப்படும் அளவிற்கு மவுசு கூடியுள்ளது. மருத்துவக் குணத்தின் காரணமாக கறிவேப்பிலைப் பொடி பெருமளவு அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மருத்துவ குணங்கள்: அஜீரணம், வயிற்றுப்போக்கு, இளநரை, முடியின் வேர்கள் வலுப்படுத்துல் ஆகியவற்றுக்கு கறிவேப்பிலை உதவுகிறது. மேலும் கால்சியம், பாஸ்பரஸ், வைட்டமின்-சி உயிர்சத்தும் உள்ளது.

செங்காம்பு, தார்வாட் 1, தார்வாட் 2 ஆகிய ரக கறிவேப்பிலை தற்போது சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

கறிவேப்பிலை சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து தோட்டக்கலைத் துறை தெரிவித்த தகவல்கள்:

மண் வகை: மணல் கலந்த செம்மண். வண்டல் மண் மற்றும் நல்ல வடிகால் வசதியுள்ள மண்.

÷நடவு முறை: பெரிய செடிகளாக வளர்க்க 2.5 மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். குத்துச் செடிகளாக வளர்க்க 1.2 மீ இடைவெளி வேண்டும்.

அதிக மகசூல் பெற 60 செ.மீட்டர் இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இம்முறையில் நடவு செய்தால் 45 முதல் 60 நாள்களுக்கு ஒரு முறை அறுவடை செய்ய முடியும். பூமியில் இருந்து 10 செ.மீ. உயரம் விட்டு அறுவடை செய்ய வேண்டும்.

உரமிடுதல்: அடிவுரம் 1 அடி ஆழத்தில் சதுர குழித் தோண்டி நாற்றுகளைச் சுற்றி மக்கிய தொழுவுரம் இடவேண்டும். பின்னர் உரத்தை மண்ணுடன் சேர்த்து கிளறி விட வேண்டும்.

÷நட்டவுடன் ஒரு முறையும், மூன்றாம் நாள் ஒரு முறையும், பின்னர் வாரம் ஒருமுறையும் நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

மேலுரம்: ஒவ்வொரு அறுவடைக்குப் பின்னரும் ஒரு செடிக்கு 20 கிலோ தொழுவுரத்தை இட்டு கொத்தி விடவேண்டும்.

பயிர் பாதுகாப்பு: கறிவேப்பிலையைத் தாக்கும் நோய் இலைப்புள்ளி நோயாகும். இதில் இருந்து பாதுகாக்க கார்பன்டைசிம் என்ற பூச்சிக்கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் அளவு கலந்து செடிகள் முழுவதும் நனையும் வரை தெளிக்க வேண்டும்.

அறுவடை மற்றும் மகசூல்: நடவு செய்யும் முறையைப் பொறுத்து மகசூல் மாறுபடும். 60 செ.மீ. இடைவெளியில் நடவு செய்தால் முதலில் 6 முதல் 9 மாதத்தில் முதல் அறுவடை செய்யலாம். தொடர்ந்து 45 முதல் 60 நாள்களில் அறுவடை செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 2000 கிலோ வரை அறுவடை செய்ய முடியும். தற்போது கறிவேப்பிலை ஒரு கிலோ ரூ.30 முதல் 40 ரூபாய் வரை விற்கப்படுகிறது. இன்னும் விசேஷ நாள்களில் கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது.

மருத்துவக் குணங்களுக்காக சாகுபடி செய்யும் கறிவேப்பிலை ரகங்களுக்கு தரத்திற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும் இதுகுறித்த விவரங்களுக்கு உதவி தோட்டக்கலை அலுவலர் பாபு என்பவரை 9444227095 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு விவசாயிகள் பயனடையலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**மறியல் போராட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆதரவு**

First Published : 24 Feb 2011 11:19:54 AM IST

கரூர், பிப்.23: சாயக் கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகளால் பிப்.25-ல் நடத்தப்படவுள்ள மறியல் போராட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் ஆதரவு தெரிவித்துள்ளது.

நொய்யல், அமராவதி, காவிரி ஆறுகளில் கலந்து வரும் சாயப்பட்டறை கழிவுநீரைத் தடுத்து நிறுத்தக் கோரியும், பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கும், விவசாயிகளுக்கும் உரிய நிவாரணம் வழங்குவதோடு, விவசாயத்திற்கும், குடிநீருக்கும் சுத்தமான நீர் வேண்டுமென சாயக் கழிவால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வலியுறுத்தி வருகின்றனர்.

இக் கோரிக்கையை வலியுறுத்தி பிப்.25-ல் கால்நடைகள், விவசாய உப பொருள்களுடன் போராட்டத்தில் ஈடுபடுவதெனவும் இச் சங்கம் முடிவெடுத்துள்ளது. இப் போராட்டத்திற்கு பல்வேறு அமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கரூர் மாவட்ட பிரிவும் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக சங்கத்தின் மாவட்டச் செயலர் எம். குருநாதன் தெரிவித்துள்ளார்.

விவசாயத்தையும், குடிநீரையும் பாதுகாக்கும் பொருட்டு, நடைபெறும் போராட்டத்துக்கு நாங்கள் ஆதரவு தெரிவிக்கிறோம்.

எனவே, சங்கத் தோழர்கள், பொதுமக்கள், வியாபாரிகள், தொழிலாளர்கள் இந்த போராட்டத்தில் பங்கேற்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார் அவர்.

**வயல்களில் நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள்**

First Published : 24 Feb 2011 10:33:28 AM IST

ராஜபாளையம், பிப். 23: ராஜபாளையம் பகுதியில் தற்போது நெல் அறுவடை நேரத்தில் மழை பெய்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

ராஜபாளையம் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் பின்பட்டத்தில் நடவுசெய்த வயல்களில் தற்போது விளைந்து நெல் அறுவடையாகி வருகிறது.

நெல் நாற்று பாவுவது முதல் அறுவடை வரை அதிக செலவு செய்துள்ள விவசாயிகளுக்கு மழையில்லாமலும், போதிய மகசூல் இல்லாமலும்,நெல்லுக்குப் போதிய விலை இல்லாமலும் விவசாயிகள் நஷ்டமடைந்தனர்.

தற்போது மழை பெய்ததால் வயல்களில் ஈரப்பதம் அதிகரித்து விளைந்த நெல்லை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது இயந்திரங்கள் மூலமே அறுவடை நடைபெறுகிறது. ஈரப்பதமுள்ள நிலத்தில் இயந்திரங்களின் டயர்கள் அல்லது வீல் பதிந்து விடுவதால், அறுவடைப் பணிகள் பாதித்துள்ளன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**நெல் கொள்முதல் விலையை குவிண்டால் ரூ. 2 ஆயிரமாக உயர்த்த**

First Published : 24 Feb 2011 01:22:51 PM IST

வேலூர், பிப். 23: நெல் கொள்முதல் விலையை குவிண்டால் ரூ. 2 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

வேலூரில் புதன்கிழமை நடைபெற்ற சங்கத்தின் மாநிலப் பொதுக்குழுக் கூட்டத்தில், இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. கூட்டத்துக்கு மாநிலத் தலைவர் கே. வெங்கடாசலம் தலைமை வகித்தார்.

தீர்மானங்கள்:

கடந்த 2 ஆண்டுகளாக கோதுமைக்கு மட்டும் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்கும் மத்திய, மாநில அரசுகள் நெல் கொள்முதல் விலையை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 2 ஆயிரம் என உயர்த்தி வழங்க வேண்டும்.

விவசாயத்துக்கு இப்போது வழங்கும் 6 மணிநேர மின் விநியோகத்தை நாள் முழுவதும் சீராக வழங்க வேண்டும். மலையடிவாரங்களில் யானை, காட்டுப்பன்றி, பறவைகள் போன்றவற்றால் சேதமாகும் பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 20 ஆயிரம் நிவாரணம் வழங்கவேண்டும்.
நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க விவசாயிகள் தொடர்ந்து தொழில் செய்ய தேசிய வங்கிகள் வட்டியில்லாமல் கடன் வழங்க வேண்டும்.
தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தை விவசாயப் பணிகளுக்கு திருப்பிவிட வேண்டும் என்பன உள்ளிட்ட 15 கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
சங்கத்தின் வேலூர் (கிழக்கு) மாவட்டச் செயலர் டி.சி. ஜெகநாதன், ஈரோடு மாவட்டச் செயலர் செங்கோட்டையன், நிர்வாகிகள் செந்தில்குமார், நந்தகோபால் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**ஆத்மா திட்டத்தில் மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி**

First Published : 24 Feb 2011 01:10:55 PM IST

சங்ககிரி, பிப்.23: வேளாண்துறையின் ஆத்மா திட்டத்தின் கீழ் சங்ககிரி பகுதி மகளிர் குழுக்களுக்கு புதன்கிழமை சுழல் நிதி வழங்கப்பட்டது.
÷சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குள்ளம்பட்டி அரசிராமணி டான்வா பண்ணை மகளிர் குழு மற்றும் மோரூர் மேற்கு மகளிர் குழு ஆகிய இரண்டு குழுக்களுக்கு வேளாண் உதவி இயக்குநர் ப. செளந்தரராஜன் தலா ரூ.5 ஆயிரம் நிதி வழங்கினார்.
÷நிகழ்ச்சியில், குழுவினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள், பதிவேடுகளைப் பராமரிப்பது ஆகியவை குறித்தும், இராஜராஜன் - 1000 நெல் சாகுபடி முறை, கரும்பு சாகுபடி முறை, மாவூப்பூச்சி கட்டுப்பாடு, மானாவாரி சாகுபடியில் பயன்படுத்த வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்தும் அதிகாரிகள் பயிற்சி அளித்தனர்.
÷குழுக்களின் நிர்வாகிகள் ஜெகதீஸ்வரி, நீலா, வசந்தி, தேன்மொழி உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

**ஆத்மா திட்டத்தில் மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி**

First Published : 24 Feb 2011 01:10:55 PM IST

சங்ககிரி, பிப்.23: வேளாண்துறையின் ஆத்மா திட்டத்தின் கீழ் சங்ககிரி பகுதி மகளிர் குழுக்களுக்கு புதன்கிழமை சுழல் நிதி வழங்கப்பட்டது.

÷சங்ககிரி வேளாண் உதவி இயக்குநர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குள்ளம்பட்டி அரசிராமணி டான்வா பண்ணை மகளிர் குழு மற்றும் மோரூர் மேற்கு மகளிர் குழு ஆகிய இரண்டு குழுக்களுக்கு வேளாண் உதவி இயக்குநர் ப. சௌந்தரராஜன் தலா ரூ.5 ஆயிரம் நிதி வழங்கினார்.

÷நிகழ்ச்சியில், குழுவினர் மேற்கொள்ள வேண்டிய பணிகள், பதிவேடுகளைப் பராமரிப்பது ஆகியவை குறித்தும், இராஜராஜன் - 1000 நெல் சாகுபடி முறை, கரும்பு சாகுபடி முறை, மாவுப்பூச்சி கட்டுப்பாடு, மானாவாரி சாகுபடியில் பயன்படுத்த வேண்டிய தொழில் நுட்பங்கள் குறித்தும் அதிகாரிகள் பயிற்சி அளித்தனர்.

÷குழுக்களின் நிர்வாகிகள் ஜெகதீஸ்வரி, நீலா, வசந்தி, தேன்மொழி உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர்.

**விவசாயத்துக்கு மின்வெட்டு தொடரும்: அமைச்சர்**

First Published : 25 Feb 2011 03:02:43 AM IST



சென்னை, பிப்.24: விவசாய பம்புசெட்டுகளுக்கான மின்வெட்டை குறைக்கும் திட்டம் இல்லை என்று மின்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி தெரிவித்தார்.

மின்வாரியத்தில் இறுதி கட்டமாக ஒப்பந்தத் தொழிலாளர்கள் 2,544 பேருக்கு பணி நிரந்தர ஆணைகளை மின்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி வியாழக்கிழமை வழங்கினார்.

அதன்பிறகு, அவர் நிருபர்களிடம் கூறியது: மின்வாரியத்தின் பொன் விழாவின்போது முதல்வர் கருணாநிதி அளித்த வாக்குறுதியின்படி, மின்வாரியத் தொழிற்சங்கங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இதன்படி, 21,600 ஒப்பந்தத் தொழிலாளர்களை படிப்படியாக நிரந்தரம் செய்ய முடிவு செய்யப்பட்டது.

இதில் கடைசி கட்டமாக 2,544 ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு பிப். 24-ம் தேதி முதல் பணி நிரந்தரம் செய்து ஆணைகள் வழங்கும் பணி தொடங்கியுள்ளது. இப்போது இதில் 1,061 பேருக்கு பணி நிரந்தர ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. மீதியுள்ளவர்களும் இந்த ஆணைகள் வழங்கப்பட

உள்ளன. இதே போல மின்வாரியத்தில் கடந்த 5 ஆண்டுகளில் 25 ஆயிரம் பேர் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்தில் இப்போது தினமும் 2 மணி நேரம் மட்டுமே மின் விநியோகம் நிறுத்தப்படுகிறது. சில இடங்களில் மின்மாற்றிகள் மற்றும் இதர இடங்களில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக மின் விநியோகம் பாதிக்கப்பட்டிருக்கக் கூடும்.

மாநிலத்தில் காற்றாலை மின்னுற்பத்தி இயல்பாக உள்ளது. மாநிலத்தில் தேவை ஏற்பட்டால் வெளிமாநிலங்களில் இருந்து 1,500 முதல் 2,000 மெகா வாட் மின்சாரம் வாங்கப்படும்.

விவசாயத்துக்கு மின்வெட்டு தொடரும்: விவசாயத்துக்கு மின்வெட்டை குறைக்கும் திட்டம் இல்லை. உயர் அழுத்த மின் இணைப்பு பெற விரும்பும் ஆலைகளுக்கு கூடுதலாக மின்சாரம் விநியோகிக்கும் திட்டம் இப்போதும் நடைமுறையில் உள்ளது.

ஒரிசாவில் மாவோயிஸ்டுகள் பிரச்னை காரணமாக தமிழகத்துக்கு வரும் மின் விநியோகத்தில் தடை உள்ளது. அனல் மின்திட்டம்-பொது கட்டுமானப் பிரிவு பணியாளர்களுக்கு, தனிக்குழுவின் பரிந்துரைப்படி பதவி உயர்வு வழங்குவதற்கான கொள்கை விரைவில் அறிவிக்கப்படும். அனைத்துப் பிரிவு பணியாளர்களுக்கும் பயிற்சி காலத்தை சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். நீதிமன்ற உத்தரவின்படி கணக்குப்பிரிவு ஊழியர்களுக்கு விரைவில் பதவி உயர்வு வழங்கப்படும் என்றார் அமைச்சர். இதில் மின்வாரியத் தலைவர் சி.பி. சிங் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

**தவிப்பில் "பீட்ரூட்' விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,00:00 IST



**திருப்பூர்:** சுல்தான்பேட்டை ஒன்றியத்தை சேர்ந்த செலக்கரிச்சல், இடையர்பாளையம், போகம்பட்டி, வடவள்ளி உள்ளிட்ட ஊராட்சிகளில் பீட்ரூட் விவசாயம் அதிகமாக செய்யப்படுகிறது. விதை ஊன்றி, 50 நாட்களில் பீட்ரூட் அறுவடைக்கு வருகிறது. ஒரு ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்யப்படுகிறது. மழைக் காலத்தில் அழுகல், நோய் தாக்குதல், வெயில் நாட்களில் மகசூல் குறைவு, தண்ணீர் பிரச்னை போன்றவை ஏற்படுகிறது. நல்ல விளைச்சல் இருந்தால் 10 டன் பீட்ரூட் கிடைக்கும். ஒரு கிலோ பீட்ரூட் ஐந்து ரூபாய்க்கு மேல் விற்றால் மட்டுமே லாபம் ஏற்படும். ஆனால் அதிகளவு விளைச்சலால் உரிய விலை கிடைக்காமல் விவசாயிகள் தவிக்கின்றனர்.

**வியப்பூட்டும் "விழுதில்லா ஆலமரம்'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,00:00 IST



**மதுரை:** ஆலமரங்கள் நூறு ஆண்டுகள் வயது கொண்டவை. விழுதுகள் தான் ஆலமரத்தின் தனிச் சிறப்பு. ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் ஆலமரத்தின் கிளைகளில் விழுதுகள் தோன்றும். பின், அவை தரையை நோக்கி வளரும். பூமியில் ஊன்றும் விழுதுகள், ஆலமரத்திற்கு பக்க பலமாக இருக்கும். இதனால், மற்ற மரங்களை காட்டிலும் ஆலமரத்தின் ஆயுள் அதிகரிக்கிறது. ஆனால், இந்த இயல்பில் இருந்து ஒரு ஆலமரம் மாறி, விழுதுகள் இல்லாமல் காட்சியளிக்கிறது. அலங்காநல்லூர் - ஊமச்சிகுளம் சாலையில், பெரியாறு பிரதான கால்வாய் பகுதியில் உள்ள ஒரு ஆலமரம், பரந்து விரிந்து நிழல் தருகிறது. ஆனால், இந்த மரத்திற்கு விழுதுகளே இல்லை. "விழுதுகள் இல்லாமல், நூறு ஆண்டு வயது கொண்ட ஒரு ஆலமரம் காணப்படுவது ஆச்சரியமான விஷயம். தாவர ஆய்வாளர்கள், இந்த மரம் குறித்து ஆய்வு செய்ய வேண்டும்' என்கிறார் அச்சம்பட்டியை சேர்ந்த 70 வயதான விவசாயி அழகு.

**கோடை வெயில் காரணமாக "ஆவின்' பால் வரத்து குறைவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,01:24 IST

ஈரோடு: கோடை வெயில் காரணமாக, ஆவின் நிறுவனத்துக்கு பால் வரத்து குறைந்துள்ளது. பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில், சென்ற 7ம் தேதி முதல் பால் வழங்குவதை நிறுத்தும் போராட்டம் நடந்தது. ஈரோடு மாவட்டத்தில் 740 பால் கொள்முதல் நிலையங்களிலும் பால் கொள்முதல் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் தினமும் 1.80 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில் தினமும் ஒரு லட்சம் லிட்டர் பால் சென்னைக்கு அனுப்பப்படுகிறது. 9ம் தேதி முதல் போராட்டம் தீவிரமடைந்ததால், தினமும் 25 ஆயிரம் லிட்டர் கூட கொள்முதலாகவில்லை. சென்னைக்கு பால் அனுப்புவது தடைபட்டது.

தனியார் பால் நிறுவனங்கள் அளவுக்கு அதிகமாக பால் கொள்முதல் செய்வதாக கூறி, 15ம் தேதி, ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஒன்பது பெரிய பால் நிறுவனங்களுக்கு, அதிகாரிகள், "சீல்' வைத்தனர். 15ம் தேதி அரசு பால் உற்பத்தியாளர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்தது. இதில், பசும்பால் விலை 16.64 ரூபாயில் இருந்து 18 ரூபாயாகவும், எருமை பால் விலை 25.20 ரூபாயில் இருந்து 26 ரூபாயாகவும் உயர்த்தப்பட்டது. பால் உற்பத்தியாளர்கள் போராட்டத்தை கைவிட்டனர். மீண்டும் பால் கொள்முதல் துவங்கியது. இருப்பினும், பால் கொள்முதல் அளவு உயரவில்லை. கோடையை மிஞ்சும் வெயில் அடித்து வருவதால், இயற்கையாகவே பால் உற்பத்தி குறைந்துள்ளது. தற்போது 1.50 லட்சம் லிட்டர் வரையே கொள்முதலாகிறது. இருப்பினும், சென்னைக்கு ஒரு லட்சம் லிட்டர் பால் அனுப்பப்படுவதால், ஈரோடு மாவட்ட விற்பனைக்கு பால் அனுப்புவது குறைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நல சங்க மாநில பொருளாளர் ராமசாமி கூறியதாவது: அரசு எதிர்பார்த்த விலையை உயர்த்தாததால், பல உற்பத்தியாளர்கள் தனியாருக்கு மாறிவிட்டனர். மேலும் தற்போது வெயில் அடித்து வருவதால், கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைந்துள்ளது. இனி வெயிலின் தாக்கம் தணிந்தால்தான் பால் உற்பத்தி அதிகரிக்கும். அதுவரை பால் கொள்முதல் அதிகரிக்க வாய்ப்பில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

## மாடு வரத்து விற்பனை உயர்வு

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,01:34 IST

ஈரோடு: ஈரோடு சந்தையில் மாடுகளின் வரத்தும், விற்பனையும் நன்றாக இருந்தது. கருங்கல்பாளையத்தில் நேற்று மாட்டுச் சந்தை கூடியது. ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த வியாபாரிகள் மாடுகளை நேற்று அதிகளவில் வாங்கிச் சென்றுள்ளனர். நேற்றைய நிலவரப்படி 500 சிந்து மாடுகளும், 400 எருமை மாடுகளும் விற்பனைக்காக வியாபாரிகள் நேற்று கொண்டு வந்திருந்தனர். சிந்து இன மாடுகள் 12 ஆயிரம் முதல் 29 ஆயிரம் ரூபாய் வரையும், எருமை மாடுகள் 14 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரையிலும் விலைபோனது.

## "பால் கொள்முதல் விலை உயர்வு: அரசு உத்தரவு வெளியாகவில்லை'

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,00:04 IST

அவிநாசி : ""தமிழக அரசு அறிவித்த பால் கொள்முதல் விலை உயர்வு தொடர்பாக இன்னும் அரசாணை வெளியிடப்படவில்லை. இதனால், உற்பத்தியாளர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது,'' என தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் முஹமது அலி பேசினார். அவிநாசி வட்டாரத்தில் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் வழங்க மறுத்து போராட்டம் நடத்திய உற்பத்தியாளர்களுக்கு பாராட்டு விழா, சேவூர் அருகே ராமியம்பாளையம் மற்றும் அவிநாசியில் நேற்று நடந்தது. மாவட்ட தலைவர் மோகன் தலைமை வகித்தார். செயலாளர் மதுசூதனன், பால் உற்பத்தியாளர் சங்க மாவட்ட அமைப்பாளர் லோகநாதன் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில தலைவர் முஹமது அலி பேசியதாவது: தமிழகம் முழுவதும் பால் உற்பத்தியாளர்கள் நடத்திய போராட்டத்தின் விளைவாக, ஒரு லிட்டர் பசும்பாலுக்கு ரூ.2.46, எருமை பாலுக்கு ரூ.3.50 உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவு இன்னும் அமலுக்கு வராததால் உற்பத்தியாளர்கள் மத்தியில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு உடனடியாக பால் கொள்முதல் விலை உயர்வு குறித்த அரசாணையை வெளியிட்டு, விலை பட்டியலையும் வழங்க வேண்டும். கோவை ஆவின் ஒன்றியம் கடந்தாண்டில் ரூ.100 கோடி லாபம் ஈட்டியுள்ளது. அதில், உற்பத்தியாளர்களுக்கு லிட்டருக்கு ஒரு ரூபாய் வழங்கப்பட்டது.

இருப்பினும், மீதமுள்ள தொகைக்கு மகாசபையில் உற்பத்தியாளர்களிடம் ஆலோசனை கேட்காமல், அதிகாரிகளே முடிவெடுத்து செயல்படுகின்றனர். லாபத்தொகையை பயன்படுத்தி, கோவையில் ஆவின் தீவன தொழிற்சாலையை நிறுவி, பால் உற்பத்தியாளர்களுக்கு தங்கு தடையின்றி தீவனம் வழங்க வேண்டும். தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 60 ஆயிரம் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டிய ரூ.15.50 கோடி தொகையை வழங்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த காரணத்தால், தமிழகம் முழுவதும் 56 தனியார் நிறுவனங்களை அரசு "சீல்' வைத்துள்ளது. தனியார் நிறுவனங்களுக்கு பால் வழங்கிய ஐந்து லட்சம் உற்பத்தியாளர்கள் பாலுக்கான தொகையை பெற முடியாமல் அவதிப்படுகின்றனர்.

உற்பத்தியாளர்களின் நலன் கருதி "சீல்' வைக்கப்பட்ட 56 நிறுவனங்களை திறக்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பால் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களது கோரிக்கையை நிறைவேற்ற உடனடியாக குழு அமைக்க வேண்டும். இவ்வாறு, முஹமது அலி பேசினார். ஒன்றிய மா.கம்யூ., செயலாளர் வெங்கடாசலம், குட்டகம் ஊராட்சி தலைவர் சுப்ரமணி, புதுப்பாளையம் ஊராட்சி முன்னாள் தலைவர் முத்துசாமி, வேலுசாமி, பழனிசாமி பேசினர்.

**வேளாண் கூட்டுறவு கடன் சங்க புதிய கட்டிடம்: அமைச்சர் திறப்பு**
பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,00:29 IST

கும்பகோணம்: பவுண்டரீகபுரம் வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்துக்கு 14.5 லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட புதிய நவீன கட்டிடத்தை அமைச்சர் கோ.சி.மணி திறந்து வைத்தார். கும்பகோணம் அருகே பவுண்டரீகபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்துக்கு சொந்தமான நவீன சங்கக்கட்டிடம் திறப்பு விழா நேற்று காலை நடந்தது. பத்து லட்சம் ரூபாய் தமிழக அரசின் நிதியுடன் 14.5 லட்சம் ரூபாய் மதிப்பில் புதிய சங்கக்கட்டிடம் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நடந்தது. திருவிடைமருதூர் யூனியன் தலைவர் ராமலிங்கம் தலைமை வகித்தார். திருப்பனந்தாள் யூனியன் தலைவர் ரவிச்சந்திரன், யூனியன் துணைத்தலைவர் இளங்கோவன், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் பிருந்தா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தனி அலுவலர் குருமூர்த்தி வரவேற்றார்.

கூட்டுறவுத்துறை அமைச்சர் கோ.சி.மணி புதிய கட்டிடத்தை திறந்து வைத்து குத்துவிளக்கேற்றினார். தொடர்ந்து மரக்கன்று நட்டார். 13.80 லட்சம் ரூபாய் மதிப்பில் கடன்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் கோ.சி.மணி வழங்கினார். தஞ்சாவூர் மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் அந்தோணிசாமி ஜான்பீட்டர் திட்டவிளக்கம் குறித்து

பேசினார். பவுண்டரீகபுரம் பஞ்சாயத்து தலைவர் இந்திராதுரைராஜ், உட்பட பலர் பங்கேற்றனர். கும்பகோணம் சரகத்துணைப்பதிவாளர் நந்தகுமார் நன்றி கூறினார்.

**வறட்சி பாதித்த பகுதிகளில் வேளாண் உயர் மட்ட குழு ஆய்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,01:07 IST

தென்காசி : வறட்சியால் பாதித்த வாசுதேவநல்லூர் பகுதிகளில் வேளாண்மை உயர் மட்ட குழுவினர் ஆய்வு செய்தனர். வாசுதேவநல்லூர் வட்டாரத்தில் நடப்பு பிசான பட்டத்தில் சாகுபடி செய்துள்ள நெற் பயிர் போதிய மழையின்மையால் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட இடங்களை மாவட்ட கலெக்டரின் அறிவுரையின் படி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் தேவசகாயம், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வைத்தியலிங்கம், தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜன் ரவிச்சந்திரன், சிவகிரி தாசில்தார் ராஜாராம் உள்ளிட்ட உயர் மட்ட குழுவினர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். நெற் பயிர் பாதித்த இடங்களை விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை துறை அலுவலர்கள் மற்றும் வருவாய் துறை அலுவலர்களிடம் பயிரிடப்பட்ட பரப்பு, பயிரில் பாதிப்பு பரப்பு, பாதித்த போது பயிர் நிலை உள்ளிட்ட விபரங்களுடன் விண்ணப்பிக்குமாறு இணை இயக்குநர் தேவசகாயம் விவசாயிகளை கேட்டுக் கொண்டார்.

விவசாயிகள் தற்போது வானிலை சார்ந்த பயிர் காப்பீட்டு திட்டத்தில் நெற் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 200 ரூபாய் வீதம் பிரிமிய தொகை செலுத்தி பயிர் காப்பீடு பயன் பெறலாம். வரும் 28ம் தேதி பிரிமியம் செலுத்த கடைசி நாளாகும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆய்வின் போது வாசுதேவநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள், தோட்டக்கலை உதவி இயக்குநர் முகைதீன், வேளாண்மை அலுவலர் ராமசாமி, உதவி வேளாண்மை அலுவலர் அண்ணாதுரை, துணை வேளாண்மை அலுவலர் மாரியப்பன், உதவி வேளாண்மை அலுவலர் ராஜாமுகமது, புளியங்குடி மேற்கு பகுதி விவசாய சங்க தலைவர் யூனுஸ், பொருளாளர் சண்முகவேல், சடையநேரி நீர்பாசன சங்க செயலாளர் முருகேசன் மற்றும் விவசாயிகள் பலர உடனிருந்தனர்.

**கொடுவா மீன் நன்னீரில் வளர்த்தால் லாபம்: அறுவடை நிகழ்ச்சியில் கலெக்டர் விளக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,00:30 IST

தஞ்சாவூர்: கடலில் வாழும் கொடுவா மீன்களை கூண்டுகள் வைத்து நன்னீரில் உற்பத்தி செய்து அதை அறுவடை செய்யும் நிகழ்ச்சி மற்றும் விவசாயிகள் சந்திப்பு நிகழ்ச்சி தஞ்சை மாவட்டம் சாலியமங்கலத்தில் நடந்தது.
கலெக்டர் சண்முகம் பேசியதாவது: ஒரு ஹெக்டேர் பரப்பளவில் சாலியமங்கலத்தில் இந்த மாதிரி பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. நன்னீரில் கொடுவா மீன் வளர்க்கும் மாதிரிப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. ஒரு கூண்டு 125 சதுர மீட்டர் அளவில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேரில் 23 கூண்டுகள் அமைக்கப்பட்டு 3.2 கிராம் எடையுள்ள கொடுவா மீன் குஞ்சுகள் ஆரம்பத்தில் விடப்பட்டது. இந்த மீன் குஞ்சுகள் விடப்பட்டு 11 மாதங்களில் 850 கிராம் எடையுள்ள கொடுவா மீன்களாக வளர்ந்து அதன் அறுவடை நடக்கிறது. விற்பனைக்கு தயாராக உள்ளது. ஒரு கூண்டில் 50 கிலோ எடையுள்ள மீன்கள் வளர்க்கப்பட்டது.

ஒவ்வொரு வாரமும் மீன்களின் வளர்ச்சிக்கு ஏற்ப ஒவ்வொ ரு கூண்டில் இருந்து அடுத்த கூட்டுக்கு மாற்றப்பட்டது. மீன்கள் வளர்ச்சி அடைந்த பின் சந்தை விற்பனைக்கு தேவையான மீன்கள் சேகரிக்கப்பட்டது. இந்த மீன்கள் விற்பனை மற்றும் வளர்ச்சி குறித்து இங்கு விவசாயிகளுக்கு நேரடி விளக்கம் காண்பிக்கப்பட்டுள்ளது.
இந்த கொடுவா மீன்கள் அதிக புரோட்டின் சத்து கொண்டதால், மக்கள் இதை அதிக அளவில் வாங்கி பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக, இந்த வகை மீன்களுக்கு வெளிநாடுகளில் அதிக அளவில் வரவேற்புள்ளது. இந்த மீன் வளர்ப்பு துவங்கும் முதலாவது ஆண்டில் ஹெக்டேருக்கு 90 ஆயிரம் ரூபாய் வருவாய் கிடைக்கும். அடுத்தடுத்த ஆண்டுகளில் கூடுதல் வருவாய் கிடைக்கும். இதுபோன்ற கொடுவா மீன் வளர்ப்பு பண்ணைகள் அமைக்க, விற்பனை மற்றும் ஏற்றுமதிக்கு மத்திய அரசின் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் உதவி வருகிறது. இவ்வாறு அவர் பேசினார். கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணைய உதவி இயக்குனர் கந்தன், சாலியமங்கலம் பஞ்சாயத்து தலைவர் மீனாட்சிசுந்தரி, மீன்வளத்துறை துணை இயக்குனர் சம்பத்குமார், உதவி இயக்குனர் வெங்கடசாமி, ஐயப்பன், ரசாக் அலி ஆகியோர் பங்கேற்றனர்.

**பருவ நிலை பயிர் காப்பீட்டு திட்டம் விவசாயிகளுக்கு 28ம் தேதி கடைசி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,01:13 IST

திருநெல்வேலி : பருவ நிலை பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர வரும் 28ம் தேதிக்குள் விவசாயிகள் விண்ணப்பிக்க வேண்டும்.நெல்லை மாவட்டத்தில் மழை, வறட்சி மற்றும் இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் இழப்புகளில் இருந்து விவசாயிகள் தங்களை காத்துகொள்ள பருவ நிலை பயிர் காப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
இத்திட்டத்தில் பிரிமிய தொகையில் 50 முதல் 75 சதவீதம் தொகையை அரசு மானியமாக

அளிக்கிறது. இடு பொருட்கள் தொகையை காப்பீட்டு தொகையாக எடுத்து கொள்ளப்படுகிறது. குத்தகை, சொந்த நிலம் உள்ளவர்கள், கடன் பெறும், கடன் பெறாத அனைத்து வட்டார விவசாயிகளும் இத்திட்டத்தில் சேர்ந்து பயன் பெறலாம். இத்திட்டத்தில் சேர வரும் 28ம் தேதி கடைசி நாளாகும். எனவே, விவசாயிகள் தங்கள் பகுதிகளில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு பாங்குகள் அல்லது தேசிய மயமாக்கப்பட்ட பாங்குகளில் உரிய படிவம் பூர்த்தி செய்து சேர்ந்து கொள்ளலாம் என்று மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் தேவசகாயம் தெரிவித்தார்.

**மலர் நாற்று நடவு பணி துவக்கம் சீசனில் வண்ண மயமாகும் ஊட்டி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 25,2011,00:02 IST

ஊட்டி : ஊட்டி தாவரவியல் பூங்காவில் அமைந்துள்ள இத்தாலியன் பூங்காவில், மலர் நாற்று நடவுப்பணி நேற்று துவங்கியது. நீலகிரி மாவட்டத்தில் வரும் மார்ச் மாதம் முதல் கோடை சீசன் களை கட்டும். இதற்கென சுற்றுலா மையங்கள் அனைத்தும் துரிதமாக தயார் செய்யப்படுகின்றன. ஊட்டி தாவரவியல் பூங்காவில் வரும் மே மாதம் நடக்கும் கண்காட்சிக்காக, கடந்த அக்டோபர் மாதம் முதலே பணிகள் நடந்து வருகின்றன. விதை சேகரித்து, நிலம் பதப்படுத்தியபின், மலர் நாற்றுகளை நடவு செய்யும் பணி தற்போது நடந்து வருகிறது. முதற் கட்டமாக, சால்வியா, டெல்பினியம், டேலியா நடவு செய்யப்பட்ட நிலையில், அஸ்டர், பெட்டோனியா, மேரி கோல்டு, பிரெஞ்சு மேரி கோல்டு, பெனோகியா உட்பட 250க்கும் மேற்பட்ட ரக மலர் செடிகள், பூங்கா முழுவதும் படிப்படியாக நடவு செய்யப்பட்டு வருகிறது. தாவரவியல் பூங்காவில் உள்ள இத்தாலியன் பூங்காவில் நேற்று நடவு பணி துவங்கியது. கடந்த மூன்று நாட்களாக ஊட்டியில் மழை பெய்து வருவதாலும், காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாலும், மலர் செடிகள் வளர்வதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. வரும் ஏப்ரல் இரண்டாம் வாரத்தில் தற்போது நடவு செய்த மலர் நாற்றுகளில் வண்ண மலர்கள் பூக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பட்டுக்கூடு விலையை குறைக்க கூட்டணி : விற்க முடியாமல் விவசாயிகள் தவிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2011,22:23 IST

மாவட்ட பட்டு வளர்ச்சி மையத்துக்கு வரும் வர்த்தகர்கள் கூட்டணி அமைத்து விலையை குறைப் பதால், பட்டுக்கூடுகளை விற்க முடியாமல் விவசாயிகள் திணறுகின்றனர். பட்டு வளர்ச்சி மையம் நிர்ணயம் செய்த விலைக்கே கொள்முதல் செய்ய அரசு உத்தரவிட வேண்டும் என, விவசாயிகள்

வலியுறுத்துகின்றனர். உடுமலை, பொள்ளாச்சி, பழனி, அன்னூர் உள்ளிட்ட பகுதிகளில் பட்டுக் கூடுகள் உற்பத்தியாகின்றன. கோவை மாவட்ட பட்டு வளர்ச்சி மையத்துக்கு இவற்றை எடுத்து வரும் விவசாயிகள், ஏலத்தில் விற்பனை செய்வது வழக்கம். பட்டு விலை விகிதம், சேதார விகிதம், காஞ்சிபுரம் சராசரி பட்டு விலை ஆகியவற்றின் அடிப்படையில் பட்டு வளர்ச்சி மைய ஆய்வாளர் பட்டுக்கூடுக்கு விலை நிர்ணயிக்கிறார். சந்தை விலை, பட்டுக்கூட்டின் விலை ஆகியவற்றின் அடிப்படையில் கிலோவுக்கு 340 ரூபாய் முதல் 360 ரூபாய் வரை பட்டுக்கூட்டுக்கு விலை நிர்ணயிக்கப்படுகிறது. பட்டு விவசாயிகள் கொண்டு வந்த 1,000 கிலோ பட்டுக்கூடுகளுக்கு சராசரியாக கிலோவுக்கு 340 ரூபாய் நேற்று நிர்ணயிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் ஏலமும் நடந்தது. பட்டுக் கூடுகளை ஏலம் எடுக்க வந்த வியாபாரிகள் கூட்டாக சேர்ந்து நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு வாங்க மறுத்தனர். பல்வேறு பகுதிகளில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரப்பட்ட பட்டுக்கூடுகள் தேங்கின. "என்ன செய்வது?' எனத் தெரியாமல் விவசாயிகள் தவித்தனர். பட்டு வளர்ச்சி மைய இணை இயக்குனர்(பொ) பன்னீர் செல்வம் மற்றும் ஆய்வாளர் யோகமாலா ஆகியோர், இரு தரப்பினரையும் அழைத்து பேசினர். வியாபாரிகள் அதிக விலைக்கு பட்டுக் கூடுகளை வாங்க மறுத்தனர். குறைந்த விலைக்கு இவற்றை வாங்க முடிவு செய்து, வியாபாரிகளும் இடைத்தரகர்களும் கூட்டணி அமைத்துள்ளனர்.

அதிகாலையில் வரும் விவசாயிகள் பட்டுக்கூடுகளை விற்பனை செய்ய முடியாமல் சோர்ந்து விடுகின்றனர். வேறு அரசு மையங்களுக்கு கொண்டு செல்வதால் கால விரயம், போக்குவரத்து செலவு ஆகியவற்றால் நஷ்டம்தான் ஏற்படும். எனவே, வியாபாரிகள் கேட்ட விலைக்கு விற்பனை செய்ய வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்படுகின்றனர். பட்டு வியாபாரிகள் கூறுகையில், "பெங்களூரு சந்தை நிலவரப்படி ஒரு கிலோ பட்டு நூல் 2,800 ரூபாயில் இருந்து 2,000 ரூபாய் ஆக குறைந்து விட்டது. அரசும் சீனாவில் இருந்து 3,000 டன் பட்டு நூலை இறக்குமதி செய்ய முடிவு செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன. "இங்கிருந்து வாங்கிச் செல்லும் பட்டுக் கூடுகளை இன்னும் 10 நாட்களுக்கு பின்னரே நூலாக மாற்ற முடியும்.

அதற்குள் விலை குறைந்து விடும் என நம்புவதால் பட்டுக் கூடுகளை வாங்க தயங்குகிறோம்,' என்றனர். மாவட்ட பட்டு வளர்ச்சி மைய இணை இயக்குனர் பன்னீர் செல்வம் கூறுகையில், ""விற்பனை ஆகாமல் தேங்கும் பட்டுக் கூடுகளை இங்கு தேக்கி வைக்க முடியாது. ""அரசு விதிமுறைகளின்படிதான் விலை நிர்ணயிக்கிறோம். வியாபாரிகளுடன் கலந்து பேசி விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் விற்பனை செய்து வருகிறோம்,'' என்றார். தொடர்ந்து வியாபாரிகளுடன் அவர் பேசியபின், மையம் நிர்ணயித்த விலைக்கே பட்டுக்கூடுகளை வாங்க வியாபாரிகள் சம்மதித்தனர். இதையடுத்து பிரச்னை முடிவுக்கு வந்தது.

பிரச்னைக்கு என்ன தீர்வு? : மாவட்ட பட்டு வளர்ச்சி மையத்தில் அரசு விதிகளின்படி காஞ்சிபுரம் சந்தை விலையின் அடிப்படையில் விலை நிர்ணயிக்கப்படுகிறது. வியாபாரிகள் அனைவரும் கூட்டாக சேர்ந்து, பெங்களூரு சந்தை விலையின் அடிப்படையில் குறைந்த விலைக்கு கேட்கின்றனர். ஒவ்வொரு முறையும் இவர்களுடன் பட்டு வளர்ச்சி மைய ஆய்வாளர் மற்றும் அதிகாரிகள் போராட வேண்டியதுள்ளது. "இதை தவிர்க்க, பட்டு வளர்ச்சி மையம் நிர்ணயித்த விலையின் அடிப்படையில் மட்டுமே ஏலமிட்டு, குறித்த நேரத்துக்குள் பட்டுக் கூடுகளை வாங்கி செல்ல வேண்டும் என உத்தரவிட வேண்டும். இடைத்தரகர்களை ஏலத்தில் பங்கேற்க அனுமதிக்கக்கூடாது' என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.- நமது நிருபர் -

**சுரைக்காய் வரத்து அதிகரிப்பு; விலை சரிவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2011,22:32 IST

பொங்கலூர் : சுரைக்காய் விலை சரிந்துள்ளதால், விவசாயிகள் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர். பொங்கலூர் வட்டாரத்தில் பெருந்தொழுவு, தொங்குட்டிபாளையம், கண்டியன்கோவில், அலகுமலை, நாச்சிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் சுரைக்காய் அதிகளவில் பயிர் செய்யப்படுகிறது. சுரைக்காய் பயிரிட அதிக ஆட்கள் தேவையில்லை. ஒருவரே ஒரு ஏக்கர் அறுவடை செய்ய முடியும். இது, எல்லா வகையான காய்கறிகளையும் விட வேகமாக வளரும் இயல்புடையது. செம்மண், வண்டல் மண் நிலங்களில் நன்கு வளரும் இயல்புடையது.

இதற்கு குறைந்தளவு தண்ணீர் இருந்தால் போதுமானது. இதனால், தண்ணீர் பற்றாக்குறை உள்ள இடங்களில் சுரைக்காய் பயிர் செய்ய விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். கடந்த நான்கு மாதங்களாக ஒரு காய் 10 ரூபாய் வரை விலை போனது. இதனால், விவசாயிகள் அதிகளவில் சுரைக்காய் பயிரிட்டனர். தற்போது மார்க்கெட்டுக்கு சுரைக்காய் வரத்து அதிகரித்துள்ளதால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. ஒரு காய் இரண்டு ரூபாய்க்கு விற்பனையாகிறது. விவசாயிகள் கூறுகையில், "40 முதல் 50 காய்களில் மூட்டை நிரம்பி விடுகிறது. ஒரு காய் பறித்து மார்க்கெட்டுக்கு கொண்டு வர, வேன் வாடகை, சுங்கம், இறக்கு கூலி ஆகியவற்றுக்கு ஒரு ரூபாய் செலவாகிறது. மீதி ஒரு ரூபாய் மட்டுமே மீதமாகிறது. கிடைக்கும் வருவாய், விதை, மருந்து, உரம், களையெடுப்பு, தண்ணீர் பாய்ச்சுவது போன்ற செலவுக்கு போதுமானதாக இல்லை,' என்றனர்.

**வரத்து அதிகரிப்பால் தக்காளி விலை குறைவு: விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2011,22:28 IST

உடுமலை : சந்தைக்கு வரத்து அதிகரிப்பால், தக்காளி விலை குறைந்துள்ளது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.உடுமலை,மற்றும் சுற்றுப்பகுதிகளில் அதிகளவு தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டு முழுவதும், அனைத்து பருவங்களிலும் தக்காளி சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.சாகுபடி செய்யப்படும் தக்காளி விற்பனைக்காக சென்னை,கேரளா உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதுதவிர, உடுமலை தினசரி காய்கறி சந்தைக்கும் கிராமப்பகுதியிலிருந்து தக்காளி அதிகளவு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.கடந்த சில மாதங்களுக்கு முன்பு பெய்த மழை காரணமாக வரத்து குறைந்து விலை அதிகமாக உயர்ந்தது. ஒரு மாதத்திற்கு முன்பு ஒரு பெட்டி தக்காளி 200 ரூபாய் முதல் 300 ரூபாய்க்கும், ஒரு கிலோ 40 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. கடந்த ஒரு மாதமாக இதே விலை நீடித்தது.

இந்நிலையில், சந்தைக்கு வரத்து அதிகரிப்பு, வெளி மாவட்ட வியாபாரிகள் வருகை குறைவு போன்ற காரணங்களினால் தக்காளி விலை குறைந்துள்ளது. கடந்த சில மாதங்களாக 300 ரூபாய் வரை விற்ற ஒரு பெட்டி தக்காளி தற்போது 35 முதல் 50 ரூபாயாகவும்; 40 ரூபாய்க்கு விற்ற ஒரு கிலோ தக்காளி தற்போது 6 ரூபாயாகவும் குறைந்துள்ளது.விவசாயிகள் கூறுகையில், "தக்காளி சாகுபடியில், ஒரு பருவத்திற்கு, ஏக்கருக்கு 12 முதல் 15 டன் வரை தக்காளி உற்பத்தி செய்யப்படுகிறது. நல்ல விலை கிடைத்து வந்த நிலையில், வரத்து அதிகரிப்பு, வியாபாரிகள் வருகை குறைவு போன்ற காரணங்களினால், விலை குறைந்துள்ளது. இதனால், லாபம் பார்க்க முடியாத சூழ்நிலை உள்ளது,' என்றனர்.

**திருப்பூரில் மீன் மார்க்கெட் அமைக்கப்படுமா?**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2011,22:32 IST

திருப்பூர் : திருப்பூரில் விசாலமான இடத்தில், போக்குவரத்துக்கு இடையூறின்றி மீன் மார்க்கெட் அமைக்க வேண்டும். அதன் மூலம் நகரின் மையப்பகுதியில் நிலவும் சுகாதாரக்கேடு மற்றும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு கிடைக்கும். திருப்பூர் பார்க் ரோட்டில் மீன் மார்க்கெட் செயல்படுகிறது. மொத்தம் 11 கடைகள் உள்ளன. ஆந்திரா மற்றும் கேரள மாநிலங்களில் இருந்தும், தமிழகத்தின் சில பகுதியில் இருந்தும் தினமும் லாரி, வேன்களில் 10 டன் எடையுள்ள

மீன்கள் வருகின்றன. மீன் நுகர்வோர் மற்றும் சிறு மீன் வியாபாரிகள், மீன் வறுவல் கடைக்காரர்கள், ஓட்டல் கடைக்காரர்கள் என பலர் வாங்குகின்றனர். மீன் கொண்டு வரும் வாகனங்கள், வாடிக்கையாளர் வாகனங்கள், ரோட்டோரத்தில் நிறுத்தப்படுகின்றன.

இதனால், பார்க் ரோட்டில் வாகன நெரிசல் ஏற்படுவது சகஜமாக உள்ளது. மீன்கள் சுத்தம் செய்யும் தண்ணீர், மீன் கொண்டு வரும் "பிரீஷர்' பெட்டிகளில் இருந்து வழியும் தண்ணீர் ரோட்டில் தேங்கி, ரோட்டை நாசமாக்குகிறது. மீன் கடைகளில் இருந்து வரும் துர்நாற்றம் காலை நேரத்தில் வாக்கிங் செல்வோருக்கு பெரும் அவதியை ஏற்படுத்துகிறது. மீன் மார்க்கெட் எதிரே தனியார் பள்ளி, பொழுதுபோக்குக்கு மக்கள் அதிகளவில் வந்து செல்லும் பார்க் ஆகியன உள்ளன. இதன் பின்புறத்தில் மீன் கழிவுகள் கொட்டப்படுகின்றன. இதனால், பார்க்குக்கு வருவோர் பெரும் சங்கடத்தில் உள்ளனர். இதுகுறித்து பொதுமக்கள், மாவட்ட நிர்வாகத்திடம் புகார் அளித்தனர். கடந்த வாரம் ஆர்.டி.ஓ., தலைமையில் நடந்த கூட்டத்தில், மார்க்கெட் பகுதியை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டது; மாற்று இடம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதுகுறித்து மீன் வியாபாரிகள் கூறியதாவது: திருப்பூர் வீதிகளில் ஆங்காங்கே இருந்த மீன் கடைகளை ஒன்றிணைத்து 11 ஆண்டுக்கு முன், அப்போதைய நகராட்சி நிர்வாகம் இந்த இடத்தை ஒதுக்கியது. இந்த இடத்துக்கு உரிய நில வரி செலுத்துகிறோம். எங்களுக்கு ஒதுக்கிய இடத்தை தொழிற்சங்கம் ஆக்கிரமித்துள்ளது. அருகில் உள்ள, கூட்டுறவு துறைக்கு சொந்தமான இடத்தை எங்களுக்கு வழங்கினால் வாகன நெரிசலை தவிர்க்கும் வகையில் செயல்படுத்தலாம். மீன் மார்க்கெட்டுக்கு தனியாக இடம் ஒதுக்கினால், கடைகளை அங்கு அமைக்க தயாராக உள்ளோம், என்றனர். வருவாய்த்துறையினர் கூறுகையில், "மாநகராட்சி சார்பில் பல்லடம் ரோட்டில் கட்டப்பட்டுள்ள ஆடுவதை கூடம் அருகே மீன் மார்க்கெட் அமைக்கலாம். இதன் மூலம் சுகாதாரம் மற்றும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு, மாநகராட்சிக்கு வருவாய் கிடைக்கும். தற்போதுள்ள இடம் காலியாகும் போது, வருவாய்த்துறை பயன்பாட்டுக்கு அந்த இடம் கிடைக்கும்,' என்றனர்.

**வனவிலங்குகளால் நஷ்டத்தை தடுக்க 5,000 ஏக்கரில் விவசாயம் தவிர்ப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 24,2011,22:50 IST

ஸ்ரீவில்லிபுத்தூர் : மேற்கு தொடர்ச்சி மலையோர விளைநிலங்களில் புகுந்து, வன விலங்குகள் சேதப்படுத்துவதால் நஷ்டம் ஏற்படுகிறது. இதை தவிர்க்க 5,000 ஏக்கரில் விவசாயம் மேற்கொள்வது கைவிடப்பட்டது.

விலங்குகளால் விளைபொருள் சேதப்படுத்தப்படுவதை தவிர்க்க வனத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதிகளான ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகத்தோப்பு, மம்சாபுரம், பிள்ளையார்நத்தம், மேல தொட்டியப்பட்டி, திருவண்ணாமலை, மகாராஜபுரம், சுந்தரராஜபுரம், சேத்தூர், தேவதானம் உட்பட்ட பகுதிகள் உள்ளது.

இப்பகுதிகளில் விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் மா, கொய்யா, வாழை, சப்போட்டா, கரும்பு, தென்னை, சேனை, பயிறு, நிலக்கடலை போன்றவைகளை பயிர் செய்கின்றனர். இவ்விளைநிலங்களில் காடுகளில்இருந்து மான், மிளா, கரடி,யானை, காட்டுப்பன்றி, காட்டெருமை கூட்டமாக வந்து நாசம் விளைவித்து வருகின்றன. தடுக்க முடியாமல் விவசாயிகள் மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர். சில நேரங்களில் விலங்குகளை விரட்டும்போது அவைகள் தாக்கி விவசாயிகளுக்கு பாதிப்பும் ஏற்பட்டுள்ளது.

வனவிலங்குகள் விளைநிலங்களில் வராமல் இருக்க பல இடங்களில் அமைக்கப்பட்ட மின் வேலிகளும் பராமரிக்கப்படாமல் செயல்பாடின்றி உள்ளது. பல இடங்களில் விலங்குகளுக்கு பயந்து விவசாயம் செய்யாமலும் விவசாயிகள் இருந்து வருகின்றனர்.

பிள்ளையார்நத்தம், மேலத்தொட்டியப்பட்டி விவசாயிகள் சங்க தலைவர் அய்யனார் கூறியதாவது: கடந்த 20 ஆண்டுகளுக்கு முன் வரை எங்கள் பகுதியில் நிலக்கடலை, பயிறு, வெங்காயம் இப்பகுதியில் தான் அதிகளவில் உற்பத்தி நடந்தது. தற்போது 5,000 ஏக்கருக்கும் அதிகமான பரப்பில் வனவிலங்குகளுக்கு பயந்து விவசாயம் செய்யவில்லை. தானிய உற்பத்தி குறைந்து வருகிறது. தற்போதும் வனவிலங்குகள் தொல்லையால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகிறோம்.

இப்பிரச்னையில் இருந்து பாதுகாக்க அகழி, மின் அதிர் வேலிகள் அமைக்க வேண்டும். வனத்தில் விலங்குகளுக்கு தேவையான தண்ணீர் தொட்டிகள் அமைக்க வேண்டும். மின் வேலிகளை பராமரிக்க ஊழியர்களை நியமிக்க வேண்டும். வனவிலங்குகளால் தாக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், என்றார்.

*பால், முட்டை, காய்கறி விலை உயர்வால் உணவு பொருள் பணவீக்கம் 11.49 சதவீதமாக அதிகரிப்பு*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*பால், முட்டை, இறைச்சி மற்றும் காய்கறிகள் விலை உயர்வால், பிப்ரவரி 12–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் 11.49 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*பால் – முட்டை*

*தொடர்ந்து இரண்டு வாரங்களாக குறைந்த வந்த உணவு பொருள் பணவீக்கம், கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், அதற்கு முந்தைய*

*வாரத்தைக் காட்டிலும் 0.44 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*அவ்வாரத்தில் பால் விலை 17 சதவீதமும், முட்டை, இறைச்சி, மீன் விலை 14.79 சதவீதமும் உயர்ந்துள்ளது. உருளைக்கிழங்கு விலை 9.72 சதவீதம் குறைந்துள்ள நிலையில், காய்கறி விலை 15.89 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*தானியங்கள் மற்றும் அரிசி விலை முறையே 2.07 சதவீதம் மற்றும் 1.65 சதவீதம் அதிகரித்துள்ள நிலையில், கோதுமை விலை 1.01 சதவீதமும், பருப்பு வகைகள் விலை 5.62 சதவீதமும் குறைந்துள்ளது.*

*உணவுப் பொருள் சாரா பணவீக்க விகிதம், பிப்ரவரி 12–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் 31.58 சதவீதமாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 13.94 சதவீதமாக இருந்தது.*

*எரிபொருள்*

*கணக்கீடு செய்வதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வாரத்தில், எரிபொருள் பணவீக்கம் 12.14 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, முந்தைய வாரத்தில் 11.92 சதவீதமாக இருந்தது.*

*சர்வதேச சந்தைகளில் கச்சா எண்ணெய் விலை, கடந்த இரண்டு ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு மிகவும் உயர்ந்துள்ளது. இதனையடுத்து, மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் அதிகரிக்கும் என்ற அச்சப்பாடு நிலவி வருகிறது. சென்ற டிசம்பர் மாதத்தில், 8.43 சதவீதமாக இருந்த இந்த பொது பணவீக்கம், இவ்வாண்டு ஜனவரி மாதத்தில் 8.23 சதவீதமாக குறைந்துள்ளது.*

*பாரத பிரதமர் மன்மோகன்சிங் பணவீக்கம் அதிகரித்து வருவது குறித்து கூறுகையில், "கடந்த 18 மாதங்களாக பணவீக்கம் உயர்ந்து வருவது ஒரு சவாலாக அமைந்துள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தேசிய உணவு பாதுகாப்பு மசோதா வாயிலாக பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வர முடியும்" என்று தெரிவித்தார்.*

*பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில், பாரத ரிசர்வ் வங்கி முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை மேலும் உயர்த்தும் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது.*

### தினசரி வேளாண் தகவல்களை பெற

# 81 லட்சம் விவசாயிகளுக்கு இலவச செல்போன் வழங்கலாம்

## தமிழக அரசுக்கு, வேளாண் பல்கலைக்கழகம் கோரிக்கை

கோவை, பிப்.25–

தினசரி வேளாண் தகவல்களை பெற 81 லட்சம் விவசாயிகளுக்கு இலவச செல்போன் வழங்க கோவை வேளாண் பல்கலைக்கழகம் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்து உள்ளது.

### கருத்தரங்கு

கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் பாசன பயிர் திட்டத்தில் பங்களிப்பு மற்றும் மேம்பாடு குறித்த கருத்தரங்கு நடைபெற்றது. இதன் தொடக்க விழா பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கலையரங்க கூடத்தில் நடைபெற்றது.

நீர் நுட்பவியல் மைய இயக்குனர் சி.செல்லமுத்து தலைமை தாங்கினார். மண் மற்றும் நீர் பாதுகாப்பு பொறியியல் பேராசிரியர் மயில்சாமி வரவேற்றார். பல்கலைக்கழக துணைவேந்தர் முருகேசப்பூபதி தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

### இ–விரிவாக்க திட்டம்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இ–விரிவாக்க திட்ட செயல்பாட்டில் தேசிய அளவில் முன்னோடியாக திகழ்கிறது. வேளாண் பல்கலைக்கழக வலைதளம் வாயிலாக விவசாயிகள், விரிவாக பணியாளர்கள் மற்றும் அனைவருக்கும் வேளாண் தகவல்களை பெற அறிவு மற்றும் சேவைக் களஞ்சியமாக திகழ்கிறது. இந்த வலைதளம் தமிழக அரசு வலை தளமான அக்ரிஸ்நெட்டின் ஒரு அங்கமாகும். இந்த வலைதளம் மத்திய அரசின் இ–கவர்னன்ஸ் என்ற விருதை அண்மையில் பெற்று உள்ளது.

வேளாண் பல்கலைக்கழகம் பழங்கள், காய்கறிகள், மலர்கள், மலைப் பயிர்களின் விலை நிலவரங்களை விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ் மூலம் (குறுஞ் செய்திகள்) செல்போனுக்கு அனுப்புகிறது. மேலும் தினசரி உள்ளூர் சந்தைகளில் நிலவும் வேளாண் பொருட்களின் விலை நிலவரத்தை சேகரித்து சுமார் 25 ஆயிரம் விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ் வாயிலாக அனுப்பப்பட்டு வருகிறது. இதற்கு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு கிடைத்து உள்ளது. இதை கருத்தில் கொண்டு வேளாண் பல்கலைக்கழகம் 81 லட்சம் விவசாய குடும்பங்கள் பயன் பெறும் வகையில் இலவச செல்போன் வழங்க தமிழக அரசுக்கு திட்டம் ஒன்றை சமர்பித்து உள்ளது. இதன் மூலம் அனைத்து விவசாயிகளும் தினசரி வேளாண் பொருட்களின் விலை நிலவரங்களை பெற முடியும்.

### செம்மை கரும்பு சாகுபடி

மேலும் பல்கலைக்கழகம் அண்மையில் செம்மை கரும்பு சாகுபடி முறையை அறிமுகப்படுத்தி உள்ளது. இதற்கு முன்பு ஒரு ஏக்கர் கரும்பு பயிரிட 10 டன், 2 அல்லது 3 மொட்டு கரணைகளை பயன்படுத்தினார்கள். ஆனால் இந்த புதிய முறை வாயிலாக ஒரு எக்டேருக்கு சிறு சீவல் 12 ஆயிரம் பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் 247 டன் மகசூல் பெற முடிகிறது. இந்த முறையை விவசாயிகள் பின்பற்றினால் உலக அளவில் சர்க்கரை உற்பத்தியில் இந்தியா முதல் இடத்தை பெற முடியும்.

இதே போல் பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தி உள்ள ராஜராஜன்–1000 என்ற செம்மை நெல் சாகுபடி முறை தீவிரமாக பரிந்துரை செய்யப்படுகிறது. இதில் 40 சதவீதம் வரை தண்ணீரை மிச்சப்படுத்த முடியும். இந்த திட்டம் வாயிலாக மாநிலத்தில் உற்பத்தி ஆகும் நெல் விளைச்சல் 4 டன்னில் இருந்து 7 டன்னாக உயர்ந்து உள்ளது. எனவே தமிழகத்தில் நெல் பயிரிடப்படும் நிலப்பரப்பு குறைந்து இருந்தாலும் உற்பத்தி திறன் அதிகரித்துள்ள காரணத்தால், மொத்த நெல் உற்பத்தி உயர்ந்து உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

கருத்தரங்கில் உலக வங்கியின் முன்னாள் ஆலோசகர் ஆ.பாலசுப்பிரமணியம், ராஜஸ்தான் மாநிலத்தைச் சேர்ந்த வேளாண் அலுவலர்கள் 20 பேர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.